**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.07/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | தாமோதரன், வயது 33 |
| Father Name/Husband Name | : | சக்திவேல் |
| Village | : | பந்தல்குடி |
| Taluk | : | அருப்புக்கோட்டை |
| Calling | : | இரண்டாம் நிலைக் காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of February 2026.

**(Accused absent. u/s 355 Bnss Petition filed and allowed)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கழுகுமலை காவல் நிலையத்தில் காவல் இரண்டாம் நிலைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது கடந்த 13.11.2024 ஆம் தேதி காலை 07.30 மணியளவில் நான் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் பொன்ராஜ், PC 4664 இரண்டாம் நிலைக் காவலர் கார்த்திக் ஆகிய போலீஸ் பார்டி சகிதம் மதுவிலக்கு சம்பந்தமாக கோவில்பட்டி to சாத்தூர் ரோட்டில் ரோந்து செய்து கண்காணித்து வந்த போது மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளருக்கு போனில் கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் வேலாயுதபுரம் மேம்பாலத்திற்கு கீழ் கையில் பையுடன் நின்றுகொண்டிருந்த நபர் எங்கள் போலீசு பார்டியை கண்டதும் ஓட எத்தனித்தவரை காவலர்கள் உதவியுடன் பிடித்து விசாரிக்க தான் ஜேசுதாஸின் மகன் ஆரோக்கியராஜ் என்று கூறினார்.
2. மேற்படி நபர் வைத்திருந்த பையை சோதனை செய்தபோது அதில் 180ML அளவுகொண்ட Black pearl பாட்டில் நான்கு எண்ணம், 180 Ml அளவு கொண்ட Golden varts இரண்டு எண்ணம், பணம் ரூபாய் 200/– அவரிடம் இருந்தது. அதுகுறித்து அவரிடம் கேட்டபோது அரசு அனுமதி இல்லாமல் இலாப நோக்கத்துடன் அதிக விலைக்கு மதுபாட்டில்களை விற்பனை செய்வதாக கூறினார். எனவே சிறப்பு உதவி ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து மேற்படி பாட்டில்களையும், மது விற்ற பணத்தையும் கைப்பற்றி மேற்படி நபருடன்

நிலையம் கொண்டுவந்து வழக்கு பதிவு செய்ய சிறப்பு உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். (**அந்த முதல் கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. வேலாயுதபுரம் பாலம் என்பது இரண்டு கிலோ மீட்டர் தொலைவு என்றால் சரிதான். உதவியாளர் என்னை விசாரித்த போது வழக்கு சம்பவம் பாலத்தில் எந்த திசையில் எங்கு வைத்து நடைபெற்றது என்று குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் எதிரி மதுபாட்டிலை விற்றுக் கொண்டிருந்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் எதிரி மது விற்றுக் கொண்டிருந்தார். நாங்கள் சம்பவ இடத்தில் சென்ற போது மது பாட்டில் வாங்கிய ஆட்கள் இருந்தார்களா என்றால் இல்லை.

4.எதிரி கையில் வைத்திருந்த பணத்தை அவர் மது விற்றுதான் பெற்றதாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ரோந்து சென்றதற்கு காவல் நிலையத்தில் வைத்து தனிஅறிக்கை தயார் செய்ததற்கு காலை 08.30 மணி இருக்குமா என்றால் இருக்கும். அந்த தனி அறிக்கை படிதான் வழக்குப் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த தனிஅறிக்கையில் நானும் , கார்த்திக் என்பவரும் கையொப்பம் செய்தோம்.

5.சம்பவ இடம் போக்குவரத்து மிகுந்த பகுதி என்றால் சரிதான். வேலாயுதபுரம் பாலத்திற்கு அடியில் தான் லாயல் மில்லில் வேலை செய்பவர்களின் இருச் சக்கர வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் என்றால் சரிதான். எனவே அந்தப் பகுதியில் 10, 20 நபர்கள் இருந்திருப்பார்கள். அந்த தனிநபர்களை நாங்கள் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

6. பொதுவாக தனிநபர் பயன்பாட்டிற்காக 4.5 லிட்டர் மதுபானம் வைத்துக்கொள்ளலாம். அதற்கு அரசு அனுமதி தேவை இல்லை. மதுவிலக்கு அமலாக்க துறையில் மாதம் 20 வழக்குகள் பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி அரசு அனுமதியின்றி விற்பனைக்காக மதுபானம் வைத்திருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், வழக்குச் சொத்துக்கள் மற்றும் ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.